**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No. 590/2022**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-1 /Pw-1 |
| Name | : தேவதாஸ் |
| Father/Husband's Name | : சாமிக்கண்னு |
| Village | : நடுவீரப்பட்டு |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 71 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20.05.2024.

முதல் விசாரணை-

நான் கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்து போனது எனது மகன். எனது மகன் உத்திரியராஜ், மணலை சமன்படுத்தும் வாகனமாக டோசர் வாகனத்தை இயக்கி வந்தார். தாம்பரத்திலுள்ள ஒரு மேற்படி டோசர் ஓனரிடம் வேலை பார்த்து வந்தார். கடந்த 25.08.2021 அன்று அலெக்ஸ் என்பவர் எனது மகனை ரோலர் வண்டியை ரிப்பேர் செய்வதற்காக அழைத்து சென்றார். பிறகு மதியம் 3 மணிக்கு எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் வந்தது. சென்னையிலுள்ள ராஜீவ் காந்தி மருத்துவமனைக்கு சென்று எனது மகனின் பிரேதத்தை பார்த்தேன். விசாரித்தபோது எனது மகன் மேற்படி ரோலரை சரிசெய்து கொண்டிருந்தபோது அந்த ரோலர் வாகனம் எனது மகன் மீது சரிந்து விழுந்து விபத்து ஏற்பட்டு விட்டதாக கேள்விப்பட்டேன்.

எதிரி அலெக்ஸை பார்த்தால் அடையாளம் காட்டுவேன். மேற்படி சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது. மேற்படி புகாரானது அ.த.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

சம்பவத்தைக் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. போன் மூலமாக தகவல் தெரிந்தது. புகாரினை நான் எழுதவில்லை. ஆனால் புகாரின் விவரங்கள் எனக்குத் தெரியும்.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.